

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 54வது வட்டத்தில் உள்ள சாணிகுளம் திருவள்ளுவர் மன்றத்தில் வட்டக் கழக செயலாளர் பா.கதிரவன் தலைமையில் 16/01/2026 வெள்ளிக்கிழமை சாணி குளம் பகுதியில் உள்ள பெண்கள் மற்றும் வட இந்திய பெண்கள் 558 பேர் பங்கேற்ற உறியடி,கோலாட்டம்,மயிலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் நடிகை சுஹாசினி மணிரத்னம், அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், கேஸ் ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா பி ஸ்ரீராமுலு எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, ஆர். கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப் குமார், ப.ஜெகதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பம்மல் பகுதி திருவள்ளூர் நகரில் அய்யன் திருவள்ளுவர் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி மேலும் தனது சொந்த செலவில் பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப் பதக்கம் ரொக்கமாக ரூபாய் வழங்கி கௌரவித்தார். பம்மல் பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் வே.கருணாநிதி மாமன்ற உறுப்பினர் ரம்யா சத்திய பிரபு கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

## விமானம் – துறைமுகம் எல்லாம் தனியார் துறைக்கே – அடுத்த அபாயகரமான 2026 பட்ஜெட்!

# ரூ.17 லட்சம் கோடியிலான உள்கட்டமைப்புகளை தனியாரிடம் ஒப்படைக்க மோடி அரசு திட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, ஜன.18-*

மோடி தலைமையிலான ஒன்றிய பி.ஜே.பி. அரசு, ரூ.17 லட்சம் கோடி மதிப்பிலான உள்கட்டமைப்புகளை மூன்று ஆண்டுகளுக்குத் தனியாருக்குத் தாரை வார்க்கும் திட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முறியடிக்க முனைய வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2014 இல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பா.ஜ.க. - தேசிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணியை அமைத்து, மிகத் தந்திரமாக - இளைஞர்களின் வேலை கிட்டா ஏக்கம், மக்களின் வறுமை - விவசாயிகளின் வாழ்க்கைத் தர மாற்ற உறுதி போன்றவற்றையே தமது ஆட்சித் திட்டமாக ஒரு மாய்மால அஜெண்டா, அள்ளிவிட்ட “ஜூம்லா”வென பின்னாளில் அவர்களே கூறி செயல்படாத, செயல்படுத்த முடியாத வாக்குறுதிகளைக் கூறி, பா.ஜ.க. - தாமோதரதாஸ் நரேந்திர மோடியை - அதுவும்கூட அவர் ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகப் பிரிவினர் என்ற ஏற்பாட்டை திட்டமிட்டுத் திணித்துச் செய்த பிறகு, தேர்தலில் பிரதமர் வேட்பாளராக அவரைக் களம் இறக்கி வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தனர் என்பது நாடறிந்த ஒன்று.

### மோடி அரசு அள்ளிவிட்ட வாக்குறுதிகள் கொஞ்சமா, நஞ்சமா?

அவர் அள்ளிவிட்ட வாக்குறுதிகளான ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தரும் வாக்குறுதி!

ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் ‘பொத்’தென்று வந்து விழும் வாக்குறுதி!

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை இரு மடங்கு மேம்பாடு அடையச் செய்யும் வாக்குறுதி!

என்று இப்படி பல வாக்குறுதிகளைத் தந்த நிலையில், இரண்டாம், மூன்றாம் முறை ஆட்சிச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிய பிறகு, முக்கியமான பலவற்றை மறைத்து, தங்களது கொள்கைகளை, ஆர்.எஸ்.எஸ். திட்டங்களை வெளிப்படையாக - அடுத்தடுத்து செயல்படுத்தி, எதிர்க்கட்சி - எதிர்க் கருத்துகளை அலட்சியப்படுத்தினர்.

தங்களது ஆட்சியைப் பயன்படுத்தி -சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகளை - அரசியலமைப்புச் சட்ட அடிக்கட்டுமானத்தையே - நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் இடித்துத் தகர்க்கும் தங்களது அஜெண்டாவான ‘ஹிந்துராஷ்டிரத்தை’யே நிலைநாட்டும் முயற்சியில் தீவிரமாக உள்ளனர்!

### ஹிந்து நாடாக்கத் திட்டம்!

*Instead of Federal only Unitary Socialist, Secular* - மதச்சார்பற்ற என்பதை அகற்றிவிட்டு, ஒற்றை ஆட்சி முறையை, எழுதப்படாத ‘ஹிந்து நாடாகவே’ ஆக்கி வருவதோடு, பதவியேற்றபோது எடுத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கும் உறுதி மொழியையே அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தெறிந்து வருகிறார்கள்!

சில நாள்களுக்கு முன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத்,

“இது ஹிந்து நாடுதான்,

இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்ன கூறினாலும் சரி” என்று பகிரங்கமாய்ப் பேசியுள்ளார்!

ஒரே மதம்- ஹிந்து மதம்

ஒரே மொழி - சமஸ்கிருதம்

ஒரே கலாச்சாரம் - சமஸ்கிருத கலாச்சாரம்

என்று பிரகடனப்படுத்தி, மாநிலங்களின் உரிமைகளான (இருந்தவை மிகக் குறைவு என்றாலும்கூட)

சமூகநீதி, கல்வி, மருத்துவம், நிதி பகிர்வு போன்ற பலவற்றிலும் வஞ்சனை செய்து, வல்லாண்மை புரிந்து வருகின்றனர்!

### சமூகநீதியை உயர்ஜாதியினருக்கு மடை மாற்றம் செய்த சூழ்ச்சி!

‘ஏழைகளுக்கு உதவுகிறோம்’ கல்வியில் என்று போக்குக் காட்டி, உயர்ஜாதி பார்ப்பனர், அவர்களுக்கு ஒப்ப வேறு சில விரலிட்டுக் காட்டத் தக்கோர் நலனுக்கென, பொருளாதாரத் துறையில் நலிந்தோர் (EWS) என தனி ஒதுக்கீடு! பொதுத் துறைகளில் இருந்த நாட்டின் தேசிய உடைமைகள், வருவாய் பெருமை - ஊற்றுக்களான தொழில் துறை, உற்பத்தித் துறை முதலியவற்றை தனிப்பெரும் கார்ப்பரேட் முதலாளிகளிடம் நீண்ட கால குத்தகை அல்லது அவர்களுக்கே விற்று விடுவது போன்ற சமூகநீதி, பொருளாதார நீதிகளுக்கு எதிர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி, அரசுத் துறைகளை அடியோடு காலி செய்து, உள்நாட்டுப் பெரு முதலாளிகள் அதிலும் குஜராத்தவர்களான அதானி, அம்பானி மற்றும் டாடா, பிர்லா போன்றவர்களுக்கு விற்கவும் தயங்கவில்லை.

சிறு உதாரணம், உலகின் சிறு சிறு குட்டி நாடுகள்கூட தமது அரசு சார்பில் தனி விமான சேவைகளை நடத்தும் நிலையில், பெரிய நாடு, ‘விஸ்வகுரு’ விலாசமிட்டுக் கொண்டுள்ள இந்தியாவில், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் இந்தியன் ஏர்லைன்ஸ், இந்திய ‘வெளிநாட்டு விமான சர்வீஸ்’ எல்லாவற்றையும் காவு கொடுத்து, மிகக் குறைந்த ‘அடிமாட்டு விலைக்கு’ பல சலுகைகளுடன் தனியாருக்குத் தந்து விட்டனர்.

### அரசுத் துறைகள் தனியார்த் துறைக்கு ஒட்டுமொத்தமாகத் தாரை வார்ப்பு!

துறைமுகங்கள், விமான நிலையங்களையே கூட தனியார் அதானி போன்றவர்களுக்கு நீண்ட கால குத்த கைக்குத், தனித்த பெருமுதலாளிகளிடம் ஒப்படைத்து, அரசு உடைமை, நாட்டுடைமைத் துறைகளை வீட்டுடைமையாக்கி மகிழ்கின்றனர்.

அதுமட்டுமா?

இட ஒதுக்கீடு தனியார் துறையில் இல்லாததால், அதையும் வீழ்த்திவிட்ட பெரு மகிழ்ச்சியும் கொள்கின்றனர்.

இப்போது ஒரு திடுக்கிடும் செய்தி!

இந்திய நாட்டின் 17 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்புகளை தனியார் வசம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைக்கும் திட்டத்தைச் செயல்படுத்திட நிதிய மைச்சகம் ஆயத்தமாகி விட்டது.

### மோடி அரசின் அடுத்த அபாயகரமான திட்டங்கள்!

ஏற்கெனவே இதை 2025-2026 பட்ஜெட்டில் நிதிய மைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சூசகமாக அறிவித்தார்.

அதை இப்போது 852 திட்டங்களாகப் பிரித்து, ஒரு பெரும் பட்டியலாக *PPP - Project Pipeline* என்று ஒன்றிய பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். மோடி அரசு வெளியிட்டுள்ளது!

இது, விவசாயிகள் நிலங்களையும், தொழிலாளர்களின் உழைப்பையும், பொதுமக்கள் தரும் வரிப் பணத்தையும் பெருமுதலாளிகளான திமிங்கலங்களின் கருவூலத்திற்கு மடை மாற்றம் செய்யும் மக்கள் நல விரோதத் திட்டமாகும்!

இதில், 51 சதவிகிதத்திற்கும் அதிகமான பங்கு சாலைப் போக்குவரத்துத் துறைக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாம்!

8.77 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 108 சாலைத் திட்டங்கள், (இதன்மூலம்) தனியார் வசமாகின்றன.

அரசுக்குப் பெரும் சாலைகள்மூலம் வந்த இதன் வருவாய்க் கட்டணம் என்ற - ஊற்றே தனிப்பட்ட பெரு முதலாளிகளின் (அவர்கள் பெரிதும் அதானி, அம்பானி, டாடா, பிர்லா வகையறாக்கள் தானே!) வசமான கொடுமை!

சாலை லாபம் பெரும் முதலாளிகளுக்கு - நட்டம் அரசு தலையில்!

“நான் ஒருபடி தவிடு கொண்டு வருகிறேன். நீ ஒரு படி அரிசி கொண்டு வா! நாம் இருவரும் ஊதி ஊதி தின்று பயனடைவோம்” என்று சொன்ன கதை நினைவுக்கு வருகிறதல்லவா?

முதலீடு - லாபம் தாண்டி, பல லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பலி பீடத்தில் நிறுத்தும் கொடுவாளான திட்டமும்கூட!

### அரசியலமைப்புச் சட்டத்தைக் கரையான் அரித்து வருகிறது!

இதுபற்றி வரும் நாடாளுமன்ற ‘பட்ஜெட்’ தொடரில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரிவான - விளக்கமான கண்டனத்தைத் தெரிவித்து, விளக்கிப் பேசி, தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

நாளுக்கு நாள் அரசியலமைப்புச் சட்டத்தைக் கரையான் அரித்து வருவதற்கு இவையே தக்க சாட்சியங்கள் ஆகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 26வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு 26வது வட்டத் துணைச் செயலாளர் லோ.ந.மதி ஏற்பாட்டில் 500 தாய்மார்களுக்கு வேட்டி, சேலை, இனிப்பு பாக்ஸ், கரும்பு எஸ்.நந்தகோபால், டி.ராமகிருஷ்ணன் வழங்கினார்கள். உடன் இ.மோகன், இ.ராஜேஷ், நாஞ்சில் ஆர். நானசேகர், இ.ஸ்ரீதரன், டி.சுடர்மணி, கட்ட.ஆனந்த், மதி உதியநிதி இளைஞரணி துணைச் செயலாளர் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தாம்பரம் மாநகரத்திற்கு உட்பட்ட 32 வது வட்டம், புலிகொரடு, குன்றுமேடு, அம்மன் கோவில் தெரு, பர்மா நகர், ஏரிக்கரை, அற்புதம் நகர், கே.கே.பாளையம், கடப்பேரி ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் 3,500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 32 வது வட்டக் கழகச் செயலாளர் இ.கமலகண்ணன் முன்னிலையில் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் நாட்காட்டி மற்றும் புத்தாடைகளை வழங்கி பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி மத்திய -மத்தூர் வடக்கு, மத்தூர் தெற்கு, மத்தூர் மத்திய - பர்கூர் வடக்கு, பர்கூர் தெற்கு, பர்கூர் மத்திய - காவேரிப்பட்டினம் கிழக்கு - போச்சம்பள்ளி வடக்கு, போச்சம்பள்ளி தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் **கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி மத்தி**ய ஆகிய 3 ஒன்றியங்களாகவும் -மத்தூர் வடக்கு, தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் மத்தூர் வடக்கு, மத்தூர் தெற்கு, மத்தூர் மத்திய ஆகிய 3 ஒன்றியங்களாகவும் – பர்கூர் வடக்கு, பர்கூர்தெற்கு காவேரிப்பட்டிணம் கிழக்கு, போச்சம்பள்ளி ஆகிய 4 ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டு, **பர்கூர் வடக்கு, பர்கூர் தெற்கு, பர்கூர் மத்திய, காவேரிப்பட்டிணம் கிழக்கு, போச்சம்பள்ளி வடக்கு போச்சம்பள்ளி தெற்கு,** ஆகிய 6 ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு அந்தந்த ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் :** 1.கம்மம்பள்ளி, 2.மல்லிநாயனப்பள்ளி, 3.காட்டிநாயணப்பள்ளி, 4.பெத்தனப்பள்ளி, 5.அகசிப்பள்ளி, 6.தேவசமுத்திரம், 7.கொண்டேப்பள்ளி, 8.பெரியமுத்தூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : நாராயணன் திருப்பதி** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் :** 1.கூலியம், 2.கங்கலேரி, 3.செம்படமூதூர், 4.பெல்லம்பள்ளி, 5.இடிகல்அகரம், 6.மோரமடுகு, 7.சிக்கபூவத்தி, 8.ஆலப்பட்டி, 9.வேலகலஹள்ளி, 10.சோக்காடி, 11.பெல்லாரம்பள்ளி, 12.பச்சிகானப்பள்ளி ஆகிய 12 ஊராட்சிகள்.

**கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் : டி. தனசேகரன்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**கிருஷ்ணகிரி மத்திய ஒன்றியம் :** 1.குருபரப்பள்ளி, 2.பிகே.செந்தனப்பள்ளி, 3.என்னைகோல்புதூர், 4.ஜிஞ்சுப்பள்ளி, 5.திப்பனப்பள்ளி, 6.பையனப்பள்ளி, 7.கல்லுக்குறிக்கி, 8.ஜாகீர்வெங்கடாபுரம், 9.பெத்தத்தாளாப்பள்ளி ஆகிய 9 ஊராட்சிகள் .

**கிருஷ்ணகிரி மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : என்.மகேந்திரன்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் வடக்கு ஒன்றியம் :** 1.கண்ணன்டஹள்ளி, 2.நாகம்பட்டி, 3.மத்தூர், 4.கவுண்டனூர், 5.வாலிப்பட்டி, 6.கே.எட்டிப்பட்டி, 7.ராமகிருஷ்ணபதி, 8.கே.பாப்பாரபட்டி ஆகிய 8 ஊராட்சிகள்.

**மத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : குணா. வசந்தரசு,** மத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் தெற்கு ஒன்றியம்** : 1.அந்தேரிப்பட்டி, 2.சாம்பல்பட்டி, 3.நாரலப்பள்ளி, 4.குன்னத்தூர், 5.கொடமாண்டபட்டி, 6.கெரிகேப்பள்ளி, 7.சாலமரதுப்பட்டி,8.சூளக்கரை,9.வீராச்சிக்குப்பம் ஆகிய 9 ஊராட்சிகள்

**மத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.ஆர். கே.நரசிம்மன்** மத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் மத்திய ஒன்றியம் :** 1.களர்பதி, 2.பொம்மேப்பள்ளி, 3.சிவம்பட்டி, 4.ஒட்டப்பட்டி, 5.பாளேத்தோட்டம், 6.பாராண்டப்பள்ளி, 7.தாதம்பட்டி, 8.ஜிங்கில்கதிரம்பட்டி, 9.வாணிப்பட்டி, 10.ஆனத்தூர், 11.இனாம்காட்டுப்பட்டி ஆகிய 11 ஊராட்சிகள்.

**மத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : வி.செந்தில் மத்தூர்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் வடக்கு ஒன்றியம் :** 1.குருவிநாயனப்பள்ளி, 2.சின்னமட்டாரப்பள்ளி, 3.வரட்டனப்பள்ளி, 4.பெலவர்த்தி, 5.பாலேப்பள்ளி, 6.மாதேப்பள்ளி, 7.பாலிநாயனப்பள்ளி, 8.ஒரப்பம் ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பர்கூர் பேரூர்.

**பர்கூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : வி.ஜி.ராஜேந்திரன்** பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் தெற்கு ஒன்றியம் :** 1.சூலாமலை, 2.அஞ்சூர், 3.ஜெகதேவி, 4.சிகரலப்பள்ளி, 5.பட்லப்பள்ளி, 6.குட்டூர், 7.பண்டசீமனூர், 8.தொகரப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**பர்கூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : எம்.அறிஞர்** பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் மத்திய ஒன்றியம் :** 1.அச்சமங்கலம், 2.மல்லப்பாடி, 3.ஒப்பதவாடி, 4.காரகுப்பம், 5.கந்திகுப்பம், 6.கொண்டநாயனப்பள்ளி, 7.மஜீத்கொல்லஹள்ளி, 8.ஐகொந்தகொத்தப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**பர்கூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : கு. காந்தி** பர்கூர்,கிருஷ்ணகிரி மாவட்டம்.

**காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம் :** 1.எருமாம்பட்டி, 2.பாலேகுளி, 3.தளிஅள்ளி, 4.பெண்னேஸ்வரமடம், 5.மாரிசெட்டிஅள்ளி, 6.நெடுங்கல், 7.ஆவத்தவாடி, 8.தட்ரஹள்ளி, 9.தாமோதரஹள்ளி, 10.அகரம், 11.குடிமேனஹள்ளி, 12. பண்ணந்தூர் ஆகிய 12 ஊராட்சிகள்.

**காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : க.மகேந்திரன்** காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி

**போச்சம்பள்ளி வடக்கு ஒன்றியம் :** 1.மாகாதேவ கொல்லஹள்ளி, 2.காட்டகரம், 3.வெப்பாலம்பட்டி, 4.வலசகவுண்டனூர், 5.குள்ளம்பட்டி, 6.பெருகோப்பனப்பள்ளி, 7.பாப்பாரப்பட்டி, 8.வாடமங்கலம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**போச்சம்பள்ளி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : எஸ். இளையராஜா** போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**போச்சம்பள்ளி தெற்கு ஒன்றியம் :** 1.போச்சம்பள்ளி, 2.வீரமலை, 3.விளங்காமுடி, 4.மருதேரி, 5.செல்லகுட்டப்பட்டி, 6.கீழ்குப்பம், 7.பாரூர், 8.அரசம்பட்டி, 9.கோட்டப்பட்டி, 10.புளியம்பட்டி ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் நாகரசம்பட்டி பேரூர்.

**போச்சம்பள்ளி தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : வி.சாந்தமூர்த்தி** போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# எழும்பூர் தொகுதியில் பொங்கல் விழா - பரிசுத் தொகுப்புகள்!

## ஆதி திராவிடர் மற்றும் தூய்மைப் பணியாளர் நலக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கல்!



*சென்னை, ஜன.18-*

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள பியாஸ் மஹாலில் பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில், சென்னை மாவட்டம் ஆதி திராவிடர் நலக் குழு, சென்னை மாவட்டம் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு, சென்னை மாவட்டம் இயன்முறை தூய்மைப் பணியாளர் நல விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஆகிய குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மாநில மற்றும் சென்னை மாவட்ட நிர்வாகிகள் ஆகியோருக்கு பச்சரிசி, வெல்லம், நெய், முந்திரி, ஏலக்காய், திராட்சை, காலண்டர் மற்றும் புடவை, வேட்டி, சட்டை உள்ளிட்ட பொங்கல் பரிசுப் பொருள் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

சென்னை மாவட்ட ஆதி திராவிடர் நலக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் து.தினகரன், இ.முருகவேல், கதிர்வேல், ஏ.வி.அரவிந்தசாமி, ப.இளங்கோவன், எஸ். சுரேஷ்குமார், சி.இறையருள், முனைவர் ஆப்பிள்ராஜன், ஏ.தேவேந்திரன்; சென்னை மாவட்டம் இயன்முறை தூய்மைப் பணியாளர் நல விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாஸ்கரன், மனோகரன், சசிகுமார், சிவக்குமார் மற்றும் தமிழ்நாடு அரசு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் ராஜன் உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 36வது வட்டத்தில் அமைந்துள்ள அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா மன்ற நிர்வாகிகள் வரவேற்புரையில் மன்ற செயலாளர் இரா. ரவிசங்கர் தலைமையில் மாமன்ற உறுப்பினர் வட்டக் கழகச் செயலாளர் ஏ.ஆர் ஆர் மலைச்சாமி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் க. ஜெயராமன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக, நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மன்ற பொருளாளர் கே.வி. சோமசுந்தரம் நன்றி உரையாற்றினார்.